**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**அ.வ.எண்.80/2022**

**தேதி : 06.12.2024**

**(பி.வா.சா.2) : திரு.மகுடீஸ்வரன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி: -**

**1. என்னுடைய கிரையப் பத்திரத்தின்படி பரிவர்த்தனைப் பத்திரத்தின் அசல் ஆவணத்தை நான் வாங்கவில்லை என்றால் ஞாபகமில்லை. கிரையம் வாங்கும்போது அதற்கு முந்தைய ஆவணங்கள் ஹேமலதா வசம் இருந்ததா என்பதை நான் விசாரித்தேனா என்றால் ஹேமலதாவிடம் ஆவணங்கள் இருந்தது அதை நான் வாங்கிப் பார்த்தேன். சின்னச்சாமிகவுண்டரின் வாரிசுதாரர்கள் யார் யார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் எனக்கு தெரிந்த வரையில் கருப்புச்சாமி தான் வாரிசு. நான் வாங்கிய கிரைய ஆவணத்தில் அனைத்தும எனக்கு வேண்டியவர்களை வைத்து தான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

**2. எனக்கு கிரையம் கொடுத்த கருப்புச்சாமி இதற்கு முன்பாக 4 முறை கிரைய ஒப்பந்தங்களை ரத்து செய்துள்ளார் என்றால் வில்லங்கத்தில் நான் மேற்படி ஆவணங்களைப் பார்த்தேன். எனக்கு கிரையம் கொடுத்த ஹேமலதா யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு சரியாகத் தெரியவில்லை. கருப்புச்சாமி எனக்கு என்ற உறவுமுறை என்றால் உறவுமுறை இல்லை. அவர் எனக்கு நண்பரா என்றால் இல்லை. கருப்புச்சாமியை யார் என்றே எனக்கு தெரியாதா என்றால் தெரியாது. எனக்கு எழுதப்படிக்கத் தெரியும்.**

3. எனக்கு கருப்புச்சாமி, சிவராஜ் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரியல்ல. கருப்புச்சாமியும், நானும் சின்னச்சாமிகவுண்டரின் வாரிசுகளை ஏமாற்றி கிரைய ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. தாவா 1 லக்க சொத்துக்கள் என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றும், அதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10—ன்படி தாவா சொத்தில் நான் உரிமை எதுவும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. 2—ம் பிரதிவாதி பவுனாத்தாளுக்கு தாவா சொத்தில் 4—ல் 1 பாகம் உள்ளது என்றால் பவுனாத்தாள் யார் என்று எனக்கு தெரியாது.

4. இந்த வழக்கு பிராதை படித்துப் பார்த்து விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். எனக்கு வழக்கு சொத்துக்கள் மற்றும் வழக்கு விபரங்கள் குறித்து நேரடியாகத் தெரியாது என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல செய்துள்ள ஆவணங்கள் 2—ம் பிரதிவாதியின் பாக உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு விபரங்களும், நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூல விபரங்களும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து 28.09.1955 ஆம் ஆண்டு சாமியப்பகவுண்டர் மக்கள் பழனிச்சாமிகவுண்டர், சின்னச்சாமிகவுண்டருக்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். சின்னச்சாமிகவுண்டருக்கு தெய்வாத்தாள், முத்தாத்தாள் என்ற இரு மனைவிகள் என்றால் சரியல்ல. தெய்வாத்தாளுக்கு காளியாத்தாள், பொன்னாத்தாள், பவுனாத்தாள் என மூன்று மக்கள் என்றால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது.

2. சின்னச்சாமிகவுண்டருக்கு இரண்டாவது மனைவி முத்தாத்தாளுக்கு கருப்புச்சாமி மகன் என்றால் சரிதான். காளியாத்தாளுக்கு வாதி ஈஸ்வரி மகள் என்றும், 8–ம் பிரதிவாதி ராஜேந்திரன், 9–ம் பிரதிவாதி சிவக்குமார் காளியாத்தாளின் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் எனக்கு தெரியாது. கருப்புச்சாமிக்கு அவரது மனைவி பிரேமா மற்றும் 4, 5 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் எனக்கு தெரியாது. பிராது 1 லக்க சொத்தை வில்லங்கச் சான்றிதழையும், ஆவணங்களையும், சட்டக்கருத்துக்களையும் பெற்றுத் தான் கிரையம் பெற்றுள்ளேன் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பாக யார் யாருக்கு சொத்து பாத்தியம் என தெரிந்து தான் வாங்கினேன். சின்னச்சாமிக்கவுண்டருக்குப் பாத்தியப்பட்ட சொத்திற்கு யார் யார் வாரிசுகள் என நான் தெரிந்துகொண்டேனா என்றால் கருப்புச்சாமி தான் வாரிசு. 27.05.2000 அன்று சின்னச்சாமிகவுண்டர், கருப்புச்சாமிக்கு தாவா மற்றும் அனைத்து சொத்துக்களையும் பொறுத்து உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. 09.12.2005 அன்று கருப்புச்சாமியின் தகப்பனார் சின்னச்சாமிகவுண்டர் இறந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 17.04.2008 அன்று கருப்புச்சாமியும், அவரது மகன் விக்னேஷ்குமாரும், சற்குணமும் உயில் மூலம் எழுதிவைத்த சொத்துக்களை பாகவிஸ்தி செய்துகொண்டதாகச் சொன்னால் சரிதான்.

4. 27.05.2000 அன்று எழுதப்பட்ட உயில் பதிவு செய்யப்படாதது என்றால் உயிலைப் பற்றி எனக்கு தெரியாது. மற்ற பாகஸ்தர்களை மறைத்து உயில் ஆவணத்தை கருப்புச்சாமி மோசடியாக உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. 17.04.2008 அன்று பாகவிஸ்திப்படி 1 லக்க சொத்து 3

முதல் 5 பிரதிவாதிகள் தங்கவேல் என்பவருக்கு பவர் கொடுத்துள்ளார்கள் என்றால் வில்லங்கச் சான்றிதழைப் பார்த்தேன். 06.10.2011 அன்று 18 நாட்களிலேயே தங்கவேல் சிவராஜுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் வில்லங்கச் சான்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. 30.01.2019 அன்று சென்னையை சேர்ந்த ஹேமலதாவும், சிவராஜும் 1, 2 லக்க சொத்தைப் பொறுத்து ஒரு பரிவர்த்தனைப் பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றால் வில்லங்கச் சான்றில் இருந்தது.

5. 09.11.2020 அன்று ஹேமலதா பரிவர்த்தனை பத்திரத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற சொத்துக்களை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்துக்களில் வாதிக்கும், வாதியின் சகோதரர் 7, 8 பிரதிவாதிகளுக்கும் பங்கு உள்ளது என்றால் சரியல்ல. 04.05.2009 அன்று 3 முதல் 6 பிரதிவாதிகள் அன்சார் அலி, ராஜாமுகம்மது ஆகியோருக்கு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார்கள் என்றால் வில்லங்கச் சான்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தத்தை 15.11.2010 அன்று ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. 18.06.2012 அன்று கதிரேசன் என்பவருடன் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் 24.06.2013 அன்று ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 29.12.2014 அன்று நாச்சிமுத்து, மணிவேலிடம் ஒரு கியைர ஒப்பந்தம் ஏற்படுத்தி 19.09.2016 அன்று ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். 08.02.2022 அன்று நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்பு தான் 28.10.2022 அன்று தாவா சொத்தை அடமானம் வைத்து HDFC வங்கியில் கடன் வாங்கினேன் என்றால் நான் தாவா தாக்கலாவதற்கு முன்பாகவே அதற்கான ஏற்பாடுகளை செய்து வந்தேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வாதியைக் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**7. நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஒப்பந்த ஆவணங்கள் அனைத்தும் பூர்வீகச் சொத்துக்கள் என்ற காரணத்தால் பின்னிட்டு ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் வாங்கிய கிரையம் வாதியைக் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியதில் இருந்து தாவா சொத்தில் எனக்கு அனுபவ பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல.**

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.12.06 20:04:16 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**